**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**S.C. NO.112/2018**

**13.12.2023 - அ.சா. 2 ஏழுமலை சத்திய பிரமாணத்தின் பேரில் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

செல்வத்திற்கு எப்படி காயம் ஏற்பட்டது யார் அடித்துக் கொன்றார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது. எந்த விதத்தில் செல்வத்திற்கு காயம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. மருத்துவமனைக்கு நான் உடன் செல்லவில்லை. ஏற்றியதோடு சரி. குழாய் தண்ணீர் பிடிப்பதற்காக சிமெண்ட் ரோடிற்கு பக்கத்தில் பள்ளம் தோண்டி வைத்திருப்பார்கள் என்றால் சரிதான். ஆஸ்பத்திரிக்கு நான் அனுப்பி வைத்த போது தூறல் போட்டுக் கொண்டு இருந்தது. கையெழுத்தை போலீசார் ஊரில் வைத்து வாங்கினார்கள். காலை 10 மணிக்கு போலீசார் ஊருக்குள் வந்தார்கள் எத்தனை மணிக்கு கையெழுத்து போட்டேன் என்று நியாபகம் இல்லை. அவர்கள் எழுதிய தாளை நான் படித்துப் பார்த்தேன். மழை ஓரளவிற்கு பெய்திருந்தது. ஆஸ்பத்திரிக்கு செல்வத்தை அனுப்பிய பிறகு நான் ஊரில் தான் இருந்தேன். ராத்திரி போலீசார் ஊருக்குள் வந்தார்களா என்றால் நான் பார்க்கவில்லை. ஊர் விஷயமாக அடிக்கடி காவல் நிலையம் செல்வேன் என்றால் சரியல்ல. என் நிலத்தில் எங்களுக்கும் என் பெரியப்பா குடும்பத்தாருக்கும் தகராறு என்பதால் காவல் நிலையம் செல்வேன். அந்த பிரச்சனையில் காவலர்கள் உதவுவார்கள் என்ற எண்ணத்தில் போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவர்கள் தயாரித்த ஆவணத்தில் கையெழுத்து போட்டு விட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/- ஏழுமலை

Taken down by me in Open Court read over to the witness
and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.